# படிகள்

## இரட்சிப்பு (Salvation)

ஏதோ ஒருவகையில் மனிதன் தன்னையும் அறியாமல் எதற்கோ அடிமையாயிருக் கிறான். மீண்டுவிட ஆசைதான். வழிதெரியாமல் கடை கடையாய்........ அலைந்துகொண்டிருக்கிறான். ஏதாவது ஒரு மருந்து ஒர்க் அவுட் ஆகாதா என்று........பாவம் அவன். இன்னும் அதிக சைடு எபெக்ட்க்குள் மாட்டி... தவியா தவித்துக்கொண்டிருக்கிறவர்க ளுக்கு ஒரே ஒரு மருந்தை அதுவும் உன்னதத்திலிருந்து வந்ததது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

இரட்சிப்பு' என்றால் '**விடுதலை**' என்று அர்த்தம். உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் பாவம் என்கிற பள்ளத்தாக்கில் விழுந்து, சமாதானத்தை இழந்து சந்தோஷத்தை தேடுகிறவனாகவும், நீதி நியாயங்களின் அர்த்தம் தெரியாதவனாகவும், உண்மையான அன்புக்காக ஏங்கியும், அது எப்படி என்று தெரியாதவனாகவும், தவறுக்கு மேல் தவறு செய்து ஆண்டவரை (நம்மை உருவாக்கினவரை) காண முடியாதவனாகவும் குற்ற உணர்ச்சியால் பாதிக்கப்பட்டும், தன்னுடைய வாழ்க்கைக்கான கணக்கை தானேப்போட்டு விடைதெரியாமல் இருக் கிறவனாகவும், வெற்றிக்காகப் போராடி தோல்வி என்னும் தலைப்பாகை அணிந்தவனாகவும், வாழ்க் கையின் எதிர் காலத்தை கண்டுபிடிப்பதற்காக அலைந்து திரிகிறவனாகவும், இருள் என்னும் போர்வை மூடினபடியால் ஒளியை விரும்பியும் அது கிடைக்காமலும் தேவ அருளைப் பெற தேகத்தின் தேவையற்ற பொருளை காணிக்கை யாய் கொடுப்பவனுமாக இருக்கிறான். அதாவது ஒரே வார்த்தையில் சொல்வோமானால் குழிக்குள் கிடக்கிற மனிதன் அல்லது சிறையில் இருக்கிற மனிதன்



நம்மை உருவாக்கின ஆண்டவர்தான் நம்முடைய வாழ்க்கை தரத்தை மாற்றமுடியும் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?

இப்படிப்பட்ட நிலமையில் உள்ள மனிதன் விடுதலைப்பெறவேண்டியது அவசியமே.

ஒரு சிறிய உதாரணத்தை உங்களுக்கு முன்பாக வைக்கிறோம். சிறையிலிருக் கிற ஒரு மனிதனுக்கு தேவையான அடிப்படை வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப் பட்டிருக்கும். ஆனாலும் அவன் கலக்கமடைந்தவனாய், நினைத்ததை செய்யமுடி யாத வனாய், திட்டங்கள் தோல்வியுற்றவனாய், நம்பிக்கை இல்லாதவனாய், கைவிடப்பட்ட வனாய், மோசமான சூழ்நிலையினால் சிக்குண்டவனாய், சந்தோஷம் இழந்தவனாய், சமாதானம் என்ற பதம் தெரியாதவனாய் இருக்கிற ஒரு மனிதன், இரட்சிப்பை (விடுதலை யை) எதிர்பார்த்துக்கொண்டிருப்பது உண்மைதானே..

சிறையிலிருக்கிற மனிதன் தனக்குத்தானே இரட்சிப்பை கொண்டுவர முடியாது

சிலர் மனிதன் என்றாலே இப்படித்தான் என்று எண்ணி சலித்துக்கொண்டு தற்கொலை செய்ய நாடி தேடுகிறார்கள். இன்னும் சிலர் இரட்சிப்பை நோக்கி 'கர்மா' மற்றும், தர்மங்களை செய்தும் புண்ணிய யாத்திரை செய்தும் இரட்சிப்பை அடைய நாடுகிறார்கள் ஆனால் முடியவில்லை. அப்படியானால் எப்படி இந்த இரட்சிப்பை (விடுதலையை) பெற்றுக்கொள்ள முடியும்?????

ஆம் முடியும் தொடர்ந்து படியுங்கள் ஆதிமனிதனை குறித்து சில காரியங்கள் சொல்லித்தான் ஆக வேண்டும்.



ஆதியிலே மனிதன் திட்டங்கள் வகுக்கவும் இல்லை ஆகவே அவன் திட்டங்கள் தோல்வியடையவும் இல்லை. தனிப்பட்டவனாய் விடப்படவும் இல்லை ஏனென்றால் ஆண் டவர் அவனோடு உறவாடிக்கொண்டிருந்தார் ஆகவே சந்தோஷம், சமாதானம் அவனுக் குள்ளே பரி பூரணமாக இருந்தது. பிற்பாடு ஆண்டவருக்கு கீழ்படியாமல் தவறு செய்த படியால் மனசாட்சியால் குத்தப்பட்டு தேவனை பார்க்ககூடாமல் ஒளிந்திருந்தான். அப்படி யாக முதலாவது '**பாவம்**' என்கிற பதம் மனிதனுக்குள்ளாக வந்தபடியினால் '**சாபம**' என்கிற ஆசீர்வாதம் அவனே வரவழைத்துக்கொண்டான். அதாவது தேவ மகிமையை இழந்துவிட்டான்(ரோமர் 3:23,6:23).

ஆகவே சிறையிருப்புக்குள் மனிதன் தள்ளப்பட்டான். இப்படிப்பட்ட மனிதன் மீட் கப்படவேண்டியது அவசியமே. சிறையிலிருக்கிற மனிதன் தனக்குத்தானே இரட்சிப்பை கொண்டுவர முடியாது. கர்மா மற்றும் தர்மத்தினாலும் அது முடியாது. ஆனால் இரட் சிப்பை (விடுதலை) பெற இன்னொருவர் அவனுடைய ஜாமீனாக வரவேண்டும் என்பது தான் நியதி.

உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் சிறைக்குள் இல்லாமலே சிறையின் அனுபவத்தை ருசிபார்த்து கொண்டிருப்பதை நாம் பார்க்கமுடியும்

அதற்காக தனது சொத்தின் வரி ரசீது கொடுக்க வேண்டும் அதாவது கிரயம்

(பலி-இரத்தம்) செலுத்தப்படவேண்டும் இல்லையேல் இரட்சிப்பு (விடுதலை) இல்லை. ஆகவேதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கிரயம் செலுத்தும்படியாக இப்புவிக்கு வந்தார். மத் 1:21 யோ 1:29 எபி 9:22, 1 கொரி 6:20; 7:23 எபி 9:12, 28, 1 யோ 2:2 ரோ 5:8 இவைகளை எல்லாம் படித்துபாருங்கள்.

எனக்கு விடுதலை கொடுக்கும்படியாகதான் இயேசுகிறிஸ்து இப்பூலோகத்திற்கு வந்தார். என்றால், நான் எப்படி இரட்சிப்பை பெற்றுக்கொள்ளலாம்?? பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலை பெற என்னதான் வழி? என்று நீங்கள் கேட்பீர்களானால், நீங்கள் செய்யவேண்டிய ஒரு காரியம் **விசுவாசம்**..ஓஹோ..அப்படினா!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார் அவருடைய இரத்ததினால் எனக்கு இரட்சிப்பு (விடுதலை) உண்டு என்று உள்ளத்திலே உண்மையாக விசுவாசித்தால்..ஏற்கனவே உங்கள் உள்ளத்தில் வர மிகவும் ஆவலுடன் இருக்கிறவர்(வெளி 3:20)

உங்கள் பாவங்களை கழுவி புதிய மனுஷனாய் மாற்றிவிடுவார். அவருடைய பிள்ளைகளாய் மாற முடியும் யோ 1:12 அவர் இல்லாமல் வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை அப் 4:12 சிறையிலிருந்து விடுதலையோடு வெளியில் வருகிற மனிதன் எப்படி ஒரு புதிய நம்பிக்கையோடு, புதிய தீர்மானத்தோடு புதிய சந்தோஷத்தோடு, சமாதானத்தோடு வருகிறானோ அதைவிட அதிக சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் இரட்சிக்கப்பட்டவன் இருப்பான். (சங் 14:7, ஏசா 51:11 லூக்19:1-10, லூக்15 ஆம் அதிகாரம்)

**நாம் பாவி என்பதை ஒத்துக்கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவர் நம்மை ஆளுகை செய்யும் படியாக அவருடைய கையில் ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்பொழுது இரட்சிப்பு கிருபையாக கொடுக்கப்படும்**



**இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை**

## இரட்சிப்பின் நிச்சயம் (Assurance of Salvation)

**நீங்கள் ஆடானால் அவர் மேய்ப்பராக இருப்பார். நீங்கள் களிமண்ணாலால் அவர் குயவனாக இருப்பார்**

எனக்கு அருமையானவர்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்வில் வந்திருக்கிறாரா? நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேனா? என்ற கேள்வியோடு நீங்கள் இருக்கிறீர்களா!

- நாம் இரட்சிக்கப்பட்டு விசுவாசிகாளானபோது நம்முடைய பாவங்களை மன்னிக்கப்பட்ட நிச்சயம் நமக்கு காணப்படும் (அப்10:43)
- மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் நம்முடைய ஜீவிதத்தில் உண்டாகும். (மத்3:8)
- கர்த்தருடைய வார்த்தைகளை தியானிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்மடைய இருதயத்தை திறந்தருளுவார் (அப்16:14)
- நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டிருக்கும் (2கொரி 4:4)
- ஜீவ ஊற்று நம்மிடத்திலிருந்து புறப்பட்டுவரும். (யோ7:38)
- அப்பா பிள்ளை என்ற உறவு வரும் (யோ1:12)
- எதிர்காலம் மற்றும் பாதுகாப்பின் நிச்சயம் கிடைக்கும்

இப்படிப்பட்ட மாற்று காரியங்கள் நம்முடைய வாழ்க்கையில் நடக்கும்பொழுது நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பது உறுதி. இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளாகிய நீங்கள் அனுதினமும் இரட்சிப்பின் அனுபவத்தின் ஊடாக செல்ல வேண்டும். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவன் இரட்சிக்கப்படுவான்.

சபையில் வெளியிலிருந்து போதகர்கள் வரும்பொழுது இதுவரையும் இரட்சிக்கப்படாதவர்கள் கரங்களை உயர்த்துங்கள் என்று சொல்லும் போது, இரட்சிக்கப்பட்டவர்கள் சந்தேகத்தோடு உங்கள் கரங்களை உயர்த்தி உங்களுக்குள் இருக்கிற ஆண்டவரை துக்கப்படுத்தாதீர்கள். நம்முடைய அசுத்தங்களை அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவி அவர் நம்மை பிள்ளையாக ஏற்றுக் கொண்ட பிற்பாடு அவர்தான் நம் அப்பாவா என்ற சந்தேகம் வேதனைக்குரியது. கர்தருக்குள் ஜனங்களை நடத்தும் தலைவர்களே இன்னும் இரட்சிப்பைக் குரித்தும், அதன் நிச்சயத்தைக்குரித்தும் தெளிவான ருசிபார்ப்பும், எண்ணமும் இருக்குமானால் மட்டுமே சரியான முறையில் ஜனங்களை நடத்த முடியும். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

D. பாலச்சந்திரன்

# படிகள்



## ஞானஸ்நானம்

ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம்வைக்கும் பொழுது அவன் இரட்சிக்கப்படுகிறான். ஞானஸ்நானம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் மேல் உள்ள உள்ளான விசுவாசத்தை வெளியே காணிப்பதுவே,

ஞானஸ்நானம் என்றாலே **"ஞானம் + ஸ்நானம்."** மனந்திரும்பிய (இரட்சிக் கப்பட்ட) பிற்பாடு ஒருவனுக்கு தெய்வீக ஞானம் வருகிறது (அவனுடைய ஆவிக்குரிய கண் திறக்கப்படுகிறது) அதற்குபிற்பாடு தேவநீதியை நிறை வேற்றுவதற்காக ஸ்நானம் பண்ணுவதுதான் ஞானஸ்நானம். இதை வேதாகமத்திலிருந்து நான் உங்களுக்கு எடுத்து இயம்புகிறேன்.

ஆவிக்குரிய ஞானஸ்நானம் மரித்து அடக்கம்பண்ணப் பட்டு அவரோடுகூட உயிர்த் தெழுதலை சித்தரிக்கிறது ரோ 6:3-5

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறந்த எட்டாவது நாளில் நியாயப்பிரமாணத் தின்படி கர்த்தருக்கு நன்றிசெலுத்தும்படியாகவும் விருத்தசேதனம் செய்யும் படியாகவும் ஆலயத்திற்கு சென்றிருந்தார். அது ஞானஸ்நானம் அல்ல. நம்மில் அநேகர் அதை தவறாக எடுத்துக்கொள்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 30 வயதில் ஞானஸ் நானம் எடுக்கும்படியாக கலிலேயாவிலிருந்து யோர்தானுக்கு 70 மைல்கள் நடந்து தேவ நீதியை நிறை வேற்றும்படியாக ஞானஸ்நானம் எடுத்தார். **ஆகவே கர்த்தராகிய இயேசுவை மாத்திரமே நமக்கு முன்மாதிரியாக வைப்போம்.**

## திருமுழுக்கைப் பற்றி ஒருசில..

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: **ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்** என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.யோ 3:3

மறுபடியும் பிறப்பு என்பது இரட்சிப்பை குறிக்கிறது. அப்பொழுதுதான் நம்மடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுகிறது பிற்பாடு தேவனுடைய இராஜ்யத்திற்கடுத்த காரியங்களை பார்க்கமுடியும் இது ஆவிக்குரிய நிலைமையின் முதல்படியாகிறது.

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் **ஜலத்தினாலும் ஆவியினாலும்** பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். யோ 3:5

தேவனுடைய இராஜ்யத்திற்கு செல்ல ஜலத்தினல் ஞானஸ்நானம் பெறுவது இன்றியமையாத படியாகிறது

ஞானஸ்நானமானது மறுபிறப்பு(இரட்சிப்பு) பெற்றபின் உடனடியாக எடுக்க வேண்டிய ஒரு காரியமாகயிருக்கிறது. ஆகவே தாமதிக்காமல் தேவ நீதியை நிறைவேற்றுங் கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆவிக்குரிய ஞானஸ்நானம் நம் ஆண்டவரை பிரியப் படுத்துகிறது. மத் 3:17

## ஞானஸ்நானம் எப்படி எடுக்க வேண்டும்?

ஞானஸ்நானம் எப்படி எடுக்க வேண்டும்? என்ற கேள்வி எல்லாருடைய உள்ளத்திலும் எழும்பும். இந்த கால கட்டத்திலே அனேக குழப்பங்கள் உண்டு ஆனாலும் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்றுசற்று ஆழ்ந்து கவனிப்போமானால் நன்றாக இருக்கும். ஞானஸ்நானம் என்பதின் மூல வார்த்தையான கிரேக்கப்பதம் **பேப்டிசோ (baptizo).** அப்படிஎன்றால் தண்ணீரில் மூழ்குவதுதான் அர்த்தம்.

இன்னும் ஞானஸ்நானம் என்பதின் அடையாளம், நீங்கள் சிலுவையில அடிக்கப்படுதல் (தண்ணீரில் நேராக நிற்பது), அடக்கம்பண்ணப்படுதல் (தண்ணீரில் மூழ்குதல்) மற்றும் உயிர்த்தெழுதல் (தண்ணீரிலிருந்து எழும்புதல்). வசனத்தை பாருங்கள் இவைகளுக்கு ஒப்பாக இருக்கிறது "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட **அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும்,** அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே **அவரோடேகூட எழுந்தவர்க ளாகவும் இருக்கிறீர்கள்.கொலே 2:12"**



"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ரோம 6:4" மேலும் இதை வாசித்து பாருங்கள் ரோம 6:3-5, 1பேது3:21. ஆகவே வேத வசனம் மூலம் மூழ்கிதான் எடுக்க வேண்டும் என்று தெளிவாக பார்க்க முடியும் சில உதாரணங்களை பார்ப்போமா!



# உதாரணமாக

மத்3:16. இயேசு ஞானஸ்நானம் பெற்று, **ஜலத்திலிருந்து கரையேறினவுடனே**

அப் 8:38. இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் **தண்ணீரில் இறங்கினார்கள்.** பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்.

அப் 10:47. அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு **எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா** என்று சொல்லி,

## எப்பொழுது எடுக்கவேண்டும்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் காலம் தாமதிக்காமல் இப்படிப்பட்ட தேவ நீதியை நிறைவேற்றுங்கள். அநேகர் என்னுடைய உற்றார் உறவினரிடம் கேட்கவேண்டும். அவர்கள் இந்தக்காரியத்தைக் குறித்து சம்மதிக்க வேண்டும், நல்ல நாட்கள் வரவேண்டும் என்று காத்திருக்கின்றனர். அது முற்றிலும் தவறு.... ஏனென்றால் உங்கள் ஆத்துமாவைக்குரித்து நீங்கள் தான் கணக்கு கொடுக்க வேண்டும். உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் அவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?... ஒருவேளை இயேசுகிறிஸ்துவின் வருகை இன்று இருக்குமானால்!

இந்த உறவைப்பொறுத்தவரைக்கும் உங்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள தனிப்பட்ட உறவு, இது மேலானது, ஆவிக்குரிய ஆசீர்வாத வாசல்கள் இதினிமித்தம் திறக்கிறது. பரலோக இராஜ்யம் இதினிமித்தம் சந்தோஷப்படுகிறது. ஆகவே தயவு-செய்து இவைகளை மனதில் கொண்டு தாமதிக் காமல் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்படியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!. வேதாகமத்திலிருந்து சில உதாரணங்களை பார்ப்போம்.

> ஆவிக்குரிய ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்திருக்கிற படியால் அது அடையாளமாக இருக்கிறது. கலா 3:26-27

# வேதத்திலிருந்து

1. பவுல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் ஞானஸ்நானம் பெற்றான் அப் 9:18

2. இத்தாலியா பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதி யாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் பேதுரு மூலமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது அப்10:43-48

3. சிறைச்சாலைக்காரன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவுடன் அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். அப் 16:33

4. இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் **தண்ணீரில் இறங்கினார்கள்.** பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அப் 8:38.

> ஆவிக்குரிய ஞானஸ்நானம் உலகத்திற்கு சாட்சியாக இருக்கிறது மத் 10:32

## பாக்கியம்

ஆவிக்குரிய ஞானஸ்நானம் எடுத்த ஒவ்வொருவரும் நம்மையும் அறியாமலே தெய்வீக ஆசீர்வாதத்திற்குள் கடந்து செல்கிறோம் கொலோசேயர் 3:3 சொல்கிறது, **"ஏனென்றால, நீங்கள் மரித்தீர்கள், (ஞானஸ்நானம் எடுக்கும்போது) உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது".** ஒரு தெய்வீக பாதுகாப்புக்குள் உங்களையும் அறியாமல் கடந்து வருகிறீர்கள். இன்னும் அனேக பாக்கியங்கள் உண்டு.

ஆகவே எனக்கு அருமையானவர்களே! ஆண்டவரின் வருகையின் காலம் சமீபம். பரலோக ராஜ்யத்திற்குள் செல்ல இன்னும் என்ன தடை!!!! சிந்திப்பீர் மார்க்கங்களின் அடிப்படையில் அல்ல பரிசுத்த வேதத்தின் அடிப்படையில். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
D. பாலச்சந்திரன்

# படிகள்



## பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

நாம் இரட்சிப்பைக்குறித்தும் தண்ணீர் ஞானஸ் நானத்தைக்குறித்து (**water baptism**) வேதாகமத்தி லிருந்து கர்த்தரின் கிருபையால் கற்றுக்கொண்டோம். இப்பொழுது அடுத்த படியான ஆவியின் ஞானஸ் நானம் (**Spirit Baptism**) குறித்து வேதாகமத்தி லிருந்து பார்ப்போம்.

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் **ஜலத்தினாலும் ஆவியினாலும்** பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். யோவ 3:5

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஞானஸ்நானத்தை எடுக்கும் பொழுது **பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல இறங்கினார்** என்று மத் 3:16 ல்

**அவர்(இயேசு) பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும்** உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். மத் 3:11.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு சீஷர்களைப் பார்த்து யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் **சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.** அப்1:4

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அநேகருக்கு குழப்பத்தை உருவாக்கினாலும் நமக்கு குழப்பம் வரக்கூடாது.




1.ஒருவன் பரிசுத்த ஆவியின் உந்துததினால் பாவ உணர்ச்சியும், இயேசுவவை ஏற்றுக்கொள்ளும் பரிணாமம் அவனுக்குள்ளாக நடை பெறுகிறது. யோ3:6-7 1கொரி12:3

2.பரிசுத்த ஆவியை பெறுதல் என்பது உந்தின பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளாக வருவது.

3.ஞானஸ்நானம் என்பது பரிபூரணம், நீச்சல் அடிக்கக்கூடிய அளவு மூழ்குதல். இதை கொடுப்பது இயேசுவே மாற்1:8

ஒரு மரமானது கனியினால் அறியப்படுவதுபோல பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றவர்களுக்கு முக்கியமாக பரிசுத்த ஆவியின் கனிகள் காணப்படும். கலா 5:22. கிறிஸ்துவின் மரணத்தினால் எல்லோருக்கும் இரட்சிப்பு உண்டு. ஆனால் எல்லோரும் அதை அடைகிறதில்லை அதேபோல இயேசுவை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியின் அனுபவத்தை பெற்றவர்கள். பரிசுத்த ஆவியின் நிறைவை அல்லது ஞானஸ்நானத்தை பெற உரிமையுண்டு ஆனால் நாம் அதை தேடுவதில்லை. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றவர்கள் மட்டுமே அதன் சந்தோஷம், வல்லமை மற்றும் கனிகள் அனுபவிக்க முடியும்.

இன்று அநேகர் இரட்சிக்கப்பட்ட உடனே பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வோமே.. அதற்கு பிற்பாடு இப்படி ஒரு அனுபவம் ஒன்றும் தேவையில்லை என்று வாதிடுவார்கள்.

இரட்சிக்கப்பட்ட உடனே பரிசுத்த ஆவிக்குள் முத்திரை போடுவது சரியே. சீஷர்கள் பெந்தெகோஸ்தே அனுபவத்திற்கு முன்பாக பரிசுத்த ஆவியை பெற்றிருந்தார்கள் வசனம் சொல்லுகிறது “பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங் களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்,“ யோவான் 20:21,22.

## வாக்குத்தத்தம்

மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.. ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.

யோவேலில் 2:28-32.



சிலபேர் இரட்சிக்கப்பட்ட உடனே பெற்றுக்கொள்வர், சிலர் ஞானஸ்நானத்தின் பொழுது பெற்றுக்கொள்வர். இன்னும் சிலர் சில நாட்களுக்கு பிற்பாடு பெற்றுக்கொள் வர். இதெல்லாம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அழைப்பும் அபிஷேகங்கள் தான். உடனே பெற்றுக்கொண்டவர்கள் ஆவிக்குரிய நிலமையில் உயர்ந்தவர்கள் என்றோ, பிற்பாடு பெற்றுக்கொண்டவர்கள் தாழ்ந்தவர்கள் என்றோ கிடையாது. தகுதியில்லாத நம்மை அவரின் கிருபைகளால் முடிசூட்டுகிறார்.

ஒருவேளை இப்படிப்பட்ட ஒரு அனுபவம் உங்களுக்கு கிடைக்கவில்லையே ஒருவேளை எனக்கு தகுதியில்லையோ! எனக்கு கிடைக்காதோ என்ற எண்ணம் வேண் டாம். வாக்குதத்தம் என்ன.......**மாமிசமான யாவர்மேலும்** அவர் ஆவியை ஊற்றுவார். ஆனால் இந்த அபிஷேகத்தை அசட்டை பண்ணாதபடிக்கு அதை உண்மை என்று விசுவாசித்து வாஞ்சையோடு காணப்படுவோமானால் கட்டாயம் நீங்கள் பெற்று விட்டீர் கள். அல்லேலுயா!

பழைய ஏற்பாட்டு காலங்களில் பரிசுத்த ஆவியும், ஆவியின் வரங்களும் ஒருகுறிப்பிட்ட கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் கடைசி காலங்களில் இப்படியாக சம்பவிக்கும் என்ற வார்த்தைபடியும், கர்த்தருடைய பிள்ளைகள் எல்லாரும் தீர்க்கதரிசி ஆக வேண்டும் என்ற மோசேயின் ஆவலின்படியும் (எண் 11:29.) அப்படியாக புதிய ஏற்பாட்டில் வாக்கு தத்தம் (பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை குறித்த வாக்குதத்தம்) நிறைவேறி யதை நாம் பார்க்க முடியும

## உதாரணமாக...

கொர்நேலியுடைய வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமான காரியங்களை அவன் செய்தாலும் பரலோகத்திற்கு அடுத்த காரியங்களை தெரிந்துகொண்டு அதற்கு கீழ்படிந்து நித்திய ஜீவனை அவன் பெற்றுக்கொள்ளும் படியாக அவனுக்கு அறிவிக்க வேண்டிய காரியங்களை பேதுரு மூலமாக தேவன் தெரியப்படுத்துகிறார்.

இப்படி கர்த்தருடைய பாடு, சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மான சுவிஷேசத்தை பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப் 10:44. இதை பேதுரு யூதேயாவி லிருக்கிற அப்போஸ்தலர்க்கும் சகோதரருக்கும் விளக்கி கூறும்பொழுது **“நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போல, அவர்கள்மேலும் இறங்கினார்.**

**யோவான் ஜலத்தினாலே ஞாஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன்”** அப் 11:15,16. அதோடு மட்டும் இல்லாதபடி வரங் களும் கொடுக்கப்பட்டது. இப்பொழுது புரிந்து விட்டதா பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானம் தேவை என்று.

ஆகவே இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை விசுவாசிக் காமலும், பெறாமல் அநேகர் உண்டு. இன்னும் சிலர் இந்த ஆசீர்வாதத்தை ஒரு போதும் விசுவாசியாதவர்களாகவும் பெறாதவர்களாகவும் இருக்கின்றனர்.

சுருங்க சொல்வோமானால் நாம் ஒரு கலசம் தண்ணீர் குடித்தால், அந்த தண்ணீர் நமக்குள்ளாக இருக்கும். அப்படியாக தண்ணீர் தொட்டிக்குள் அல்லது கடலுக்குள் இருப்போமானால் நாம் தண்ணீருக்குள் இருப்போம் . நாம் இரட்சிப்பை அடையும் பொழுது ஒரு கலசத்தை பெற்றுக்கொள்கிறோம். ஆனால் பரிசுத்தஆவி யால் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும் பொழுது முதலாவது குடித்த ஒரு கலசம் தண்ணீர் ஒரு கடலாக மாறி நம்மை சுற்றி இருப்பதை உணரமுடியும்.

ஆகவே “எல்லா விசுவாசிக்கும் பரிசுத்த ஆவியானவர் இருந்தாலும், அதோடு பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு அல்லது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்வது அவசியமாக இருக்கிறது.

வரும் நாட்களில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை எப்படி பெற்றுக்கொள் வோம் என்பதைப்பற்றியும் அபிஷேகத்தின் நிச்சயத்தைக்குரித்தும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

தொடரும்...

**நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத் தையும் அறிந்திருக்கிறீர்கள்.**

**1யோவ 2:20**



**நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தி யமாயிருக்கிறது, பொய் யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.**

**1 யோவ 2:27**

கிறிஸ்துவின் பணியில்

D. பாலச்சந்திரன்

# படிகள்

## அபிஷேகத்தின் நிச்சயம்



கர்த்தரால் கொடுக்கப்படுகிற இந்த அபிஷே கத்தை குறித்து அநேகருக்கு அநேக குழப்பங்கள் உண்டு. உண்மையாகவே நான் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறேனா????? அப்படி என்றால் எனக்கு எப்படி நிச்சயமாக தெரியும்? இன்னும் அநேக கேள்விகளோடு ஒருவேளை நீங்கள் இருக்கலாம்...

### அடையாளம்

நான் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தபொழுது அங்கு இரட்டைகுழந்தைகளை பார்த்தேன். ஒரே குழப்பமாக இருந்தது.. இதில் யார் ராஜா யார் அரசன் என்று.. நான் அந்த பெற்றோர்களிடம் கேட்டேன் எப்படி இந்த குழந்தைகளை அடையாளம் கண்டு கொள்ளுகிறீர்கள்??? ஆரம்பத்தில் எங்களுக்கும் சற்று கடினமாகதான் இருந்தது. இப்பொழுது சில அடையாளங்களை கண்டு வைத்திருக்கிறோம். ஆகவே எங்களுக்கு இலகுவாக இருக்கிறது

அடையாளம் என்பது மிகவும் முக்கியமான ஒரு காரியம். இந்த குழப்பங்கள் நமக்கு இருக்கக்கூடாது என்பதற்குதான் கர்த்தர் சொன்னார் "மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.. யோவேலில் 2:28-32. வாக்குதத்தத்தை கர்த்தர் கொடுக்கும்பொழுது அப்பொழுது வரம் என்கிற அடையாளத்தை பார்க்கிறோம். ஆவியானவர் நமக்குள் இறங்கின உடனே அடையாளங்கள் அல்லது வரங்களினாலே கர்த்தர் அலங்கரிப்பார் இதுவே அபிஷேகத்தின் நிச்சயம்.

உங்களை எந்த நோக்கத்தோடு கர்த்தர் அழைத்திருக்கிறாரோ அதற்கு ஏற்றாற்போல் அவர் அபிஷேகித்து வரங்களையும் இலவசமாக தருவார். மேலும் வரங்களை நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து கேட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

2 கொரிந்தியர் 12 ம் அதிகாரத்தில் அநேக வரங்களை நாம் பார்க்க முடியும். இதில் ஏதாவது ஒரு வரமோ அல்லது அதிகமான வரங்களோ உங்களிடத்தில் கர்த்தர் கிருபையாக கொடுத்திருப்பாரேயானால் நீங்கள் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள் என்பது உறுதி.

### வரங்கள்

- ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும்,
- ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,
- ஆவியினாலேயே விசுவாசமும்
- ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,
- அற்புதங்களைச் செய்யும் சக்தியும்
- தீர்க்கதரிசனம் உரைத்தலும்
- ஆவிகளைப் பகுத்தறிதலும்
- பற்பல பாஷைகளைப் பேசுதலும்
- பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும்

### அந்நிய பாஷை குறித்தே பேசுகிறார்களே???



இப்பொழுது உங்களுக்கு தெளிவாக புரிந்திருக்கும் என்பதை நாம் விசுவாசிக்கிறோம். பொதுவாக அந்நிய பாஷை உங்களுக்கு இருந்தால் தான் நீங்கள் அபிஷேகம் பண்ணப்பட்டீர்கள் என்பது சரியானது அல்ல. அந்நிய பாஷை இல்லாமலும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களும் உண்டு. ஒரு வேளை நீங்கள் கேட்கலாம் ஏன் எல்லாரும் அந்நிய பாஷை குறித்தே பேசுகிறார்கள்???? அல்லது அதற்கே ஏன் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்???

அருமையானவர்களே! அந்நிய பாஷை உங்களுடைய பக்தியை விருத்தி (பெருக்கும்) அடைய செய்யும். என்னுடைய தனிப்பட்ட ஜீவிதத்தின் அனுபவம் என்னவென்றால் அந்நிய பாஷையின் வரத்தை பெற்றுக்கொண்ட பிற்பாடு ஆண்டவரோடு அதிக நேரம் செலவிட கர்த்தர் கிருபை செய்தார். ஆகவே அந்நிய பாஷையை வேண்டாம் என்று யாரும் ஒதுக்க வேண்டாம். அதுவும் ஒரு அடையாளமாகவே இருக்கிறது. அதை தேவனிடத்தில் வாஞ்சித்து பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் அந்நியபாஷை இல்லாமல் வேறு

ஏதாவது வரங்கள் கர்த்தர் கொடுத்திருப்பாரேயானால் அவர்கள் அபிஷேகம் பெறவில்லை என்று தாழ்வாக நினைக்க வேண்டாம்.

## யாரால் நடத்தப்படுகிறீர்கள்?

இந்த நாட்களிலே அபிஷேகம்பண்ணப்பட்டோம் என்று சொல்லுகிற உங்கள் ஒவ்வொருவரையும் யாரால் நடத்தப்படுகிறீர் என்பது மிக முக்கியம்.

1. நாமே நம்மை நடத்துகிறோமா?
2. மற்றவர்கள் நம்மை நடத்துகிறார்களா?
3. தேவ ஆவியானவர் நம்மை நடத்துகிறாரா?

என்ற கேள்வியை உங்கள் உள்ளத்தில் கேட்டு பாருங்கள் முதல் இரண்டு கேள்விக்கும் இல்லை என்றும் மூன்றாவது கேள்விக்கு ஆம் என்றால் நீங்கள் அபிஷேகம் பண்ணப் பட்டவர்கள். 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' அபிஷேகம் பண்ணப் பட்டவர்களுக்கு குழப்பங் களோ, சந்தேகங்களுக்கோ வாய்ப்பே இல்லை. தேவ ஆவியானவர் சகல சத்தியத்திற் குள்ளும் உங்களை நடத்துவாராக! ஆமென்.

## அபிஷேகத்தை பெற்றுக்கொள்வதற்கு..

**1. இயேசு கிறிஸதுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றிருக்க வேண்டும்.**

முன்னே தூரமாக இருந்த நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தினால் சமீபமாகி அவருடைய பிள்ளையாக மாற வேண்டும் அப்பொழுது சகல துரைத் தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள். கொலே 2:10

**2. பாவங்களை விட்டுவிட வேண்டும.**

இரட்சிக்கப்பட்ட நாம் அனுதினமும் நம்மை சந்திக்கும் பாவத்தை மேற் கொள்ள வேண்டும். ஒருவேளை நாம் தவறி பாவத்தோடு உடன் பட்டால் அந்த பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். "நமக்குப் பாவமில்லையென் போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.(1யோவ1:8).

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் **பாவ மன்னிப் புக்கென்று** இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது **பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.** அப் 2:38

**3. உலகத்திற்கு முன்பாக அறிக்கை செய்ய வேண்டும்.**

நாம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவன் என்பதை உலகம் அறியும் வண்ணம் நாம் நம் நடைமுறையில் காட்டி ஆண்டவர் பிள்ளை என்பதை அறிக்கை செய்ய வேண்டும். "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படு வாய். ரோம 10:9 நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். எபி4:14



**4. கீழ்படிதல்**

வேதம் சொல்லுகிறது பரிசுத்த ஆவியால் நடத்தப்படுகிறவன் அவருடைய பிள்ளை யாக இருக்கிறான். அப்படியென்றால் கீழ்படிகிறவர்களாக இருக்க வேண்டும். "தேவன் தமக் குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள். அப் 5:32"

**5. தாகம்**

தாகமே பானம் பண்ணுவதற்கு ஆதாராமாக இருக்கிறது. யோவ7:37-38 ல்"இயேசு நின்று, சத்த மிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக் கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத் திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.

**6. கேளுங்கள்**

தாகத்தோடு ஆண்டவரிடத்தில் கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள். "பொல்லாதவர் களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர் களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.லூக் 11:13"

**7: விசுவாசம்**

முழுவிசுவாசத்தோடு ஜெபிக்கும்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார். மத்-21:22

பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து தாகத் தோடு எதிர்பார்ப்போடு உங்களை முழுவதும் அர்ப்பணித்து உண்மையாக கேட்போமானால் கர்த்தர் நிச்சயமாக உங்களை அபிஷேகிப்பர்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தருடைய பணியில்
D. பாலச்சந்திரன்

# படிகள்

## அப்பம் பிட்குதல்



“அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் **பஸ்காவை புசிக்கும் படிக்கு** நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார்….

பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர் களுக்குக் கொடுத்து: **இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக் கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.**

போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: **இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது என்றார்.** லூாக் 22:8-20.

### பஸ்கா

பஸ்கா எகிப்தின் அடிமையிலிருந்து விடுதலையான நாளின் விடுதலை பண்டிகை

எனக்கு அருமையானவர்களே! அப்பம்பிட்குதலுக்கு முன்பாக பஸ்காவைகுறித்து கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது.

நீங்கள் யாத்திராகமம் 12, 13 அதிகாரங்கள் லேவியராகமம் 23 அதிகாரங்களை வாசித்தால் பஸ்கா பண்டிகையை குறித்து தெளிவாக கற்றுக்கொள்ளலாம். இங்கே அதை நாம் சுருக்கமாக கற்றுக்கொள்ளபோகிறோம்.

யாத் 13:3 ல் “அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: **நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து** புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள்; கர்த்தர் பலத்த கையினால் உங் களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆகையால், நீங்கள் புளித்த அப்பம் புசிக்கவேண்டாம்”.

**அதாவது அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து ஜனங்களை கர்த்தர் விடுதலை பண்ணின அந்த நாள்தான் பஸ்கா.** பஸ்காவிலே ஒரு பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டி அடிக்கப்படவேண்டும் என்பது நியதி. யாத் 12:5

புதிய ஏற்பாட்டில் உலகத்தின பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி, ஜனங்களின் **பாவம், சுயம் மற்றும் பிசாசின் கிரியைகளிலிருந்து** ஆவிக்குரிய விடுதலையை ஞாபகார்த்தமாக அனுசரிப்பதுதான் இந்த புதிய உடன்படிக்கை. ஆகவேதான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் நம்முடைய பாவங்களுக்காக பிட்கப்பட்டதை) **என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள் என்றார்.** இவ்வாறாக இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு இந்த ஆவிக்குரிய உண்மையை வெளிப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை கூறுவதை பார்க்கமுடியும்.

இயேசு அவர்களை நோக்கி: ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்

### திருவிருந்தில் பங்கு கொள்வதால்….

**1. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நினைப்பூட்டுகிறது.**

திருவிருந்தில் பங்கு கொள்ளும் போதெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்தார் மீண்டும் உயிர்தெழுந்தார் என்பதை நினைப் பூட்டுகிறது (லூாக் 22:19-20, 1 கொ 11:26)

அவருடைய மரணத்தை நினைவுகூறும்போது, அவர் மூன்று நாட்கள்தான் மரித்திருந்தார் பிற்பாடு மரணத்தை ஜெயித்தார்.எபி 2:14-15. என்ற சந்தோஷம் நம்மை ஆட்கொள்ள வேண்டும்.(யோ 16:20)

**2. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு கூட உள்ள உறவை காட்டுகிறது.**

அவருக்குள் நாம் ஒரே சரீரமாக இருக்கிறோம். “நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமு மாயிருக்கிறோம்.” 1 கொ 10:16-17

### 3. இயேசுகிறிஸ்துவின் வருகையை நினைப்பூட்டுகிறது

ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் **கர்த்தர் வருமளவும்** அவருடைய மரணத்தைத் தெரிவிக் கிறீர்கள். 1 கொ 11:26. அவர் வருமளவும் என்ற வார்த்தை அவருடைய வருகையை தெளிவாக்குவதை நாம் பார்க்க முடியும்.

## திருவிருந்தில் யார் யார் பங்கு

- ⇒ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஆண்டவராக அங்கீகரித்து உங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.
- ⇒ மூழ்கு ஞானஸ்நானம் எடுத்திருக்க வேண்டும்.
- ⇒ பரிசுத்த பந்தியில் பங்கு கொள்வதற்கு முன்பதாக ஆயத்தத்தோடும், பரிசுத்தத்தோடும் கலந்துகொள்ள வேண்டும்.

## கவனிக்க வேண்டிய காரியங்கள்.

திருவிருந்தில் பங்குகொள்ளுவதற்கு முன்பாக நாம் நம்மையே சோதித்து மனிதருக்கு விரோதமாக தவறு செய்திருப்போமானாலும், தேவனுக்கு விரோதமாக அக்கிரமம் செய்திருப்போமானாலும் உடனடியாக ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்டு சீர்பொருந்தி கலந்துகொள்ள வேண்டும். ஏனென்றால். அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்தால்

- ⇒ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனா யிருப்பான்.
- ⇒ தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்.
- ⇒ அநேகர் பலவீனரும்
- ⇒ வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்
- ⇒ அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். (1 கொ11:27-31)

## இன்னும் அவரிடத்தில் கிட்டி சேர

எம்மாவு சீஷர்கள் அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாத படியி- னால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை. அப்பொழுது அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். **அப்பொழுது அவர்களு டைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள்.** லூாக்24:30-31. இன்னும் அவரி டத்தில் கிட்டிசேர அதின் முக்கியத்துவத்தை அறிந்து அதில் பங்குகொள்ளுங்கள்

**அருமையான தேவ பிள்ளைகளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்களை நினைவுகூர்ந்து அப்பம் பிட்குதலில் பங்கு கொள்ளுங்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!.**

> என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்

> என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணு கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.

> என் மாம்சம் மெய்யான போஜ னமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

> அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷ குமார னுடைய மாம்சத்தைப் புசியாம லும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யா கவே உங்களுக்குச் சொல்லு கிறேன்.

# படிகள்

## சபை கூடிவருதல் (Church)

சபை என்ற வார்த்தையின் மூல வார்த்தை எக்ளெசியா எனப்படும் இதன் அர்த்தம் அழைக்கப்பட்டவர்கள். புதிய ஏற்பாட்டிலே சபை என்கிற வார்த்தையை அதிகமாக நாம் பார்க்க முடியும் சபை என்றால் ஒரு கூட்டம் ஜனங்கள் சேர்ந்திருப்பது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவி னால் கழுவப்பட்ட ஒவ்வொருவரும் தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம். நமக்குள் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார். என்பதை மறந்து விடக்கூடாது. கீழ்காணும் வசனங்கள் ஒவ் வொன்றையும் வேதாகமத்தை திறந்து படியுங்கள்.1கொரி-3:16 நீங்கள் தேவனுடைய ஆலயமா யிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக் கிறீர்களா? 1கொரி-3:17,1கொரி-6:19,2கொரி-6:16

தேவன் தங்குகிற ஆலயமாகிய நீங்கள் ஒருகூட்டமாக ஒருமித்து தேவனை புகழுகிற, ஆராதிக்கிற ஒரு இடம்தான் சபை. அந்த சபையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் சொந்த ரத்தத்தினால் சம்பாதித்து அப் 20:28 அந்த சபைக்கு அவர் தலையாக இருக்கிறார் எபே 5:23, 1:23,கொலே1:18, கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். எபே-5:27 இப்படிப்பட்ட சபையை கர்த்தர் போஷித்து வருகிறார். எபே-5:29

இப்படிப்பட்ட சபையை கண் காணிப்பதற்காக தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். 1கொரி-12:28. இந்த சபை எடுத்துக்கொள்ளப்போகிற மணவாட்டி சபையாக இருக்கிறது. ஆகவே கர்த்தராகிய இயேசு தலையாயிருக்கிற ஒரு சபை யின் மேய்ப்பருக்கு கீழ்படிய வேண்டும்.

## வேதாகமத்திலிருந்து...

எபிரேயர்10:19-25 நீங்கள் பல முறை படித்துப்பாருங்கள் அப்பொழுது அதன் அர்த்தத்தை விளங் கிக்கொள்ளமுடியும். காலம் சமீபமாக இருக்கிறபடியினாலே சபை கூடுதலை விட்டு விடாதீர்கள்.

1. உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். வ22
2. நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக் கக்கடவோம் வ23
3. அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; வ24
4. சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் வ25
5. ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; வ25

நம்மை சபையில் சேர்த்தது கர்த்தர் என்பதை நம்முடைய ஆழ்மனதில் பதித்து வைத் துக்கொள்ள வேண்டும். “இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்” அப்-2:47

## சபைக்கூடிவருதலின் முக்கியத்துவம்

### (1) தேவன் பேரில் உள்ள நம்முடைய உண்மையான அன்பைவெளிக்காட்ட

சபையிலே விசுவாசிகளோடு சேர்ந்து கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை ஒருவருக் கொருவர் அறிக்கை செய்து கர்த்தர் நாமத்தை ஒருமித்து உயர்த்துவதற்கும், அவருடைய நாமத்தை மகிமை படுத்துவதற்கும் ஏற்றதாக இருக்கும் (மத் 10:32-33). அவர் நாமத்தை சபைக்கு அறிவிக் கவும் துதியை செலுத்துவதற்கும். சங்22:22. பரிசுத்த ஸ்தலத்திலே உங்கள் கரங்களை உயர்த் தும்போது கர்த்தர் மகிமைப்படுவார். சங் 134:2



இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே, சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். சங்-68:26

உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன். சங்-22:22

## (2) நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை பெலப்படுவதற்கு

சபையிலே மற்றவர்களுடைய வீசுவாச வாழ்க்கையும் அங்கே பகிர்கிற கர்த்தரின் வார்த்தையும் நம்முடைய விசுவாசத்தை வளரச்செய்து நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை பெலப்படும். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். ரோம10:17

## (3) சபையில் கர்த்தரின் மகிமையான பிரசன்னம் நம்மை மூடும்.

அவருடைய வாக்குதத்தத்தின்படி விஷேசித்த அவருடைய பிரசனம் சபையின் மத்தியிலே கடந்து வரும். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். மத் 18:20

## (4) மற்ற தேவ பிள்ளைகளோடு ஐக்கியம் வளருகிறது.

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? சங் 133:1 ஒரே அப்பாவின் பிள்ளைகளாகிய நாம் கூடும்பொழுது எத்தனை கொண்டாட்டம்.

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1யோ1:7

## (5) சபைக்கு செல்வது கர்த்தருக்கு கீழ்படிதலை காட்டுகிறது.

சபை கூடுதலை விட்டுவிடக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்(எபி 10:25). அதை நாம் நிறைவேற்றும் பொழுது கர்த்தருக்கு கீழ்படிதலை காட்டுகிறது.

## (6) சபைக்கு செல்வது ஆவிக்குரிய தலைவர்களை மகிழச்செய்யும்

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. எபி 13:17

அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,1 தெச 5:12. இவ்வாறாக சபைக்கு செல்வதன் மூலம் கர்த்தருடைய பிள்ளைகளை மகிழச்செய்கிறது.

## (7) சபையிலே ஜெபிக்கிற ஜெபம் வல்லமையுள்ளது

அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத் 18:19

உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.லேவி 26:8. சபையிலே நீங்கள் ஒருமனப்பட்டு ஜெபிக்கிற காரியத்திற்கு கட்டாயம் பதில் உண்டு.

மேலும் சபைக்கு செல்வது கர்த்தருடைய நாளை கனம் பண்ணுகிறது “நாலாவது கற்பனையான ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; யாத் 20:8

## கடைசியாக...

எனக்கு அருமையானவர்களே! இந்த கடைசி காலத்திலே சத்தியத்தை நாம் சரியாக தெரிந்து கொள்ளும் பொழுது சத்தியம் உங்களை விடுதலையாக்கும். ஒரு நாள் சபையில் அமர்ந்திருக்கும் பொழுது அனேக ஜனங்களுக்கு அடிப்படைகாரியங்கள் தெளிவாக தெறியவில்லை என்ற ஒரு பெரிய பாரத்தை கர்த்தர் உள்ளத்திலே போட்டார். எப்படி ஜனங்களிடத்தில் இதை கொண்டு செல்ல முடியும் என்று யோசித்த பொழுது, எழுத்து வடிவத்தில்தான் சாத்தியம் என்பதையும் தேவன் நினைப்பூட்டினார். ஆகவே இந்த காரியங்கள் எழுதப்பட்டது.

இரட்சிக்கப்பட்ட பின்பு நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேனா!! என்ற சந்தேகம் எழும்பவே கூடாது.. அது போல அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு குழப்பங்கள் இருக்கவேகூடாது. மேலும் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ள வேண்டும். அப்படியே சபை கூடுதலை விட்டுவிடாமல் இன்னும் பால் குடிக்கும் குழந்தையை போல் இல்லாமல், பெலப்பட்டு. ஒருமித்து சேர்ந்து கர்த்தர் நாமத்தை மகிமைப்படுத்துவோம். கர்த்தர் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

முற்றும்.

கர்த்தாவே, வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும், பரிசுத்தவான்களின் சபையிலே உம்முடைய உண்மையும் விளங்கும். சங்-89:5

மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்; அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். சங்-22:25

மகா சபையிலே உம்மைத் துதிப்பேன்; திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன். சங்-35:18

கர்த்தரின் பணியில்

*D. Balachandran*